| | | |
|---|---|---|
| | **வலயக்கல்வி அலுவலகம்-கிளிநொச்சி** | 34 T |
| விஞ்ஞானம் | **அலகுப் பரீட்சை- 02**<br>03rd March 2020 | தரம்–06<br>60 நிமிடங்கள் |

பெயர்:……………………………………

## பகுதி I

**மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க**

1) திணிவை அளப்பதற்கான சர்வதேச நியம அலகு எது?
   1) மில்லிகிராம் 2) கிராம் 3) கிலோகிராம் 4) லீற்றர்

2) பின்வருவனவற்றுள் சடப்பொருட்களுக்கு உதாரணமாக அமைவது எவை?
   1) வெப்பம், பேனா 2) புத்தகம், ஒட்சிசன்
   3) ஒலி, வெப்பம் 4) புத்தகம், ஒளி

3) பின்வருவனவற்றுள் சக்திக்கு உதாரணமாக அமையாதது எது?
   1) ஒலி 2) ஒளி 3) நீர் 4) வெப்பம்

4) தேங்காயெண்ணெய் எப்பௌதீக நிலையில் காணப்படும்?
   1) திண்மம் 2) வாயு 3) நீர் 4) திரவம்

5) பின்வருவனவற்றுள் திண்ம நிலையில் காணப்படும் பதார்த்தம் எது?
   1) நீர் 2) ஒட்சிசன் 3) பேனை 4) நீராவி

6) “நீராவி” எப் பௌதீக நிலையில் காணப்படும்?
   1) வாயு 2) திரவம் 3) திண்மம் 4) சக்தி

7) இருக்கும் பாத்திரத்தின் முழுக் கனவளவையும் எடுக்கும் சடப்பொருள் எது?
   1) திண்மம் 2) திரவம் 3) வாயு 4) சக்தி

8) திட்டமான கனவளவினைக் கொண்டதும் திட்டமான வடிவத்தை கொண்டிராததுமான பொருள் எது?
   1) செங்கட்டி 2) நீர் 3) ஒட்சிசன் 4) பஞ்சு

9) இறப்பரில் காணப்படும் விசேடமான இயல்பு எது?
   1) இழையமைப்பு 2) வன்தன்மை 3) மீள்தன்மை 4) நீட்டற்தகவு

10) கனவளவை அளக்கப்பயன்படும் அலகு எது?
   1) கிலோகிராம் 2) மில்லிலீற்றர் 3) மில்லிமீற்றர் 4) மில்லிகிராம்

11) கண்ணாடி வெட்டும் கத்தியில் பயன்படுவது எது?
   1) அலுமினியம் 2) வைரம் 3) செப்பு 4) இரும்பு

12) சுத்தியல் செய்வதற்கு பயன்படும் உலோகம் எது?
   1) செப்பு 2) பித்தளை 3) இரும்பு 4) அலுமினியம்

13) நொருங்கும் இயல்பினைக் காட்டும் பதார்த்தங்கள் எவை?
   1) கண்ணாடி, பஞ்சு 2) கண்ணாடி, மணல் கடதாசி
   3) கரி, கண்ணாடி 4) கரி, பூசல் மா

14) பின்வருவனவற்றுள் வாயுக்களை மாத்திரம் கொண்டவை எது?
   1) காபனீரொக்சைட், நீர், ஒட்சிசன் 2) நைதசரன், நீர், ஒட்சிசன்
   3) நைதரசன், நீர், காபனீரொக்சைட் 4) நைதரசன், நீராவி, ஒட்சிசன்

15) கம்பி செய்வதற்கு பயன்படும் மிகப்பொருத்தமான பதார்த்தம் எது?
   1) ஒட்டு இறப்பர் 2) காரியம் 3) செப்பு 4) மீளும் நாடா

16) ஆபகரணங்கள் செய்ய தங்கம், வெள்ளி போன்றன பயன்படுத்தக் காரணமாக இருக்கும் இயல்புகள் எவை?

1) நீட்டற்தகவு, மீள் இயல்பு
2) நீட்டற்றகவு, வன்தன்மை
3) வாட்டற்றகவு, வன்மை
4) நீட்டற்றகவு, வாட்டற்றகவு

17) பன்சன் சுடரடுப்பில் பயன்படும் எரிபொருள் எது?
1) ஒட்சிசன் வாயு
2) திரவ பெற்றோலிய வாயு
3) மதுசாரம்
4) மண்ணெண்ணெய்

18) நீர் திண்ம நிலையில் எவ்வாறு காணப்படும்
1) நீராவி
2) பனிக்கட்டி
3) உலர் பனிக்கட்டி
4) குடிநீர்

19) உலக நீர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
1) மார்ச் 23
2) மார்ச் 20
3) மார்ச் 22
4) மார்ச் 04

20) இழையமைப்பினை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்
1) சுத்தியலால் அடிப்பதன் மூலம்
2) விரலினால் தொட்டு உணர்வதன் மூலம்
3) நொருக்குவதன் மூலம்
4) வளைப்பதன்மூலம்

***(20 x 2 = 40 புள்ளிகள்)***

## பகுதி II

***மிகப்பொருத்தமான சொல்லினைப் பயன்படுத்தி இடைவெளி நிரப்புக***

**( பஞ்சு, சக்தி, திணிவு, பொன், வன்மைத் தன்மை, சடப்பொருட்கள், மின், வாயு, திரவம், மீள்தன்மை )**

1) திணிவையும் இடத்தையும் அடைப்பவையுமான பொருட்கள் ………………………..…. எனப்படும்.

2) சூழலின் உள்ளடக்கம் சடப்பொருட்கள் , ……………………….. என இரு வகைப்படும்.

3) ஒலி, வெப்பம் ……………………….. என்பன சக்தி வடிவங்களுக்கு உதாரணம் ஆகும்.

4) திட்டமான வடிவமோ, திட்டமான கனவளவோ அற்ற பொருட்கள் …………..…… எனப்படும்.

5) …………………………… கொண்டிராதவையும் வெளியில் இடத்தை எடுத்துக் கொள்ளாததுமானவை சக்தி என அழைக்கப்படும்.

6) புறவிசையினால் திரவியங்களின் வடிவத்தினை மாற்ற முடியாத நிலை ……………………..…….. எனப்படும்.

7) கையுறையை உற்பத்தி செய்வதற்கு இறப்பர் பயன்படுத்தக் காரணம் அதில் காணப்படும் …………………………. இயல்பாகும்.

8) நீட்டற்றகவு உடைய பதார்த்தம்….………………………………………………… ஆகும்.

9) மென் இழையமைப்பு உடைய பதார்த்தம் ……………………………………… ஆகும்.

10) நீர் ஆனது இயற்கையில்.....………………….. நிலையில் காணப்படும் சடப்பொருளாகும்.

***(10 x 2 = 20 புள்ளிகள்)***

***சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் எழுதுக***

1) ஒளி சக்தி வடிவத்திற்கு உதாரணமாகும் (    )
2) திணிவை அளப்பதற்கு கிலோகிராம் என்ற அலகு மட்டும் பயன்படும் (    )
3) வளியானது வெளியில் இடத்தை கொள்ளும் (    )
4) சடப்பொருட்கள் திண்மம் , திரவம் என்று இருவகைப்படும் (    )
5) நிராவி திரவ நிலையில் காணப்படும் சடப்பொருள் ஆகும் (    )
6) திட்டமான வடிவம், திட்டமான கனவளவு உடையது திரவம் ஆகும் (    )

7) “**கரி**” நொருங்கும் இயல்பு உடைய பதார்த்தம் ஆகும் ( )

8) மணல் கடதாசி மென் இழையமைப்பினை உடைய பதார்த்தம் ஆகும் ( )

9) உலோகங்கள் பொதுவாக நீட்டற்றகவு வாட்டற்றகவு இயல்பு உடையவை ( )


***(10 x 1 = 10 புள்ளிகள்)***

***பின்வருவனவற்றை தொடர்புபடுத்துக.***

| | |
|---|---|
| 1) வாயு | திண்மம் |
| 2) திரவம் | செப்பு |
| 3) வாட்டற்றகவு | சக்தி |
| 4) வெப்பம் | காபனீரொட்சைட் |
| 5) புத்தகம் | இரசம் |

***(5 x 2 = 10 புள்ளிகள்)***

***(01) பாடசாலையில் மாணவன் ஒருவன் மேற்கொண்ட பரிசோதனை கீழே காட்டப்பட்டுள்ளது.***




(i) காட்டப்பட்டுள்ள உபகரணத்தினை இனங்காண்க

..............................................................................................................(2 புள்ளி)

(ii) இவ் உபகரணத்தின் பயன்பாடு யாது?

..............................................................................................................(2 புள்ளி)

(iii) மேலுள்ள உபகரணத்தில் காணப்படும் நீரின் கனவளவைக் குறிப்பிடுக?

..............................................................................................................(2 புள்ளி)

(iv) சடப்பொருட்களின் இயல்புகள் 2 தருக?

..............................................................................................................

..............................................................................................................(2 புள்ளி)


(v) சடப்பொருட்களின் மூவித நிலைகளும் எவை?

..............................................................................................................

..............................................................................................................(2 புள்ளி)

***(மொத்தம் - 10 புள்ளிகள்)***

***(02) மாணவர் குழு ஒன்றினால் அமைக்கப்பட்ட செயற்பாடு கீழே காட்டப்பட்டுள்ளது.***




1) பலூன் A யிலிருந்து வளி மெதுவாக வெளியேற்றப்பட்ட போது பெறப்படும் அவதானம் யாது?

………………………………………………………………………………………………….

……………………………………………………………………………………………………(3 புள்ளி)

2) இச் செயற்பாட்டினை செய்வதன் நோக்கம் யாது?

……………………………………………………………………………………………………(3 புள்ளி)

3) பலூனில் உள்ள வளி சடப்பொருளின் எப் பௌதீக நிலையில் உள்ளது?

……………………………………………………………………………………………………(2 புள்ளி)

4) பலூனை உற்பத்தி செய்வதற்கு பயன்படும் பதார்த்தம் கொண்டிருக்க வேண்டிய இயல்பு 1 தருக

……………………………………………………………………………………………………(2 புள்ளி)

***(மொத்தம் - 10புள்ளிகள்)***


*செல்வி. தி. நிருஜா*

*கிளி/தர்மகேணி அ.த.க பாடசாலை*